| O.S.No. 04/2020 | PW2: திரு. முருகேசன் த/பெ. திரு. கண்ணன் | 25-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனக்கு பிரம்மதேசம் – புதூர் கிராமம் ஆகும். வாதியின் தந்தை பெயர் நாகப்பன். நாகப்பன் எனக்கு மாமா முறை. நாகப்பனுடைய தந்தை பெயர் ஜில்பா நாயக்கர். ஜில்பா நாயக்கருக்கு இரண்டு மனைவிகள் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் கேள்விப்பட்டுள்ளேன். முதல் மனைவியின் மகன்தான் சின்னப்பையன். இரண்டாவது மனைவியின் மகன்கள்தான் ராமகிருஷ்ணன், நாகப்பன், சண்முகம் ஆகும். சின்னப்பையன் இறந்துவிட்டார். அவரது மகன்கள்தான் 1, 2 பிரதிவாதிகள் ஆகும். மேற்படி நபர்களுக்கிடையே சொத்து சம்மந்தமாக பல ஆண்டுகளாக பிரச்சனை இருந்து வருகிறது.

2. 1, 2 பிரதிவாதிகள் சொத்துக்களை பிரித்துத்தரவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்தனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கின் தீர்ப்பில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சொத்துக்கள் ஏக குடும்ப சொத்துக்கள் என்று தீர்ப்பாகியது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு தீர்ப்பான நிலையில் சோமுவின் தந்தை வாதியின் பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைப்பதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விஷயங்களை வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுடன் சுமூகமாகத்தான் உள்ளேன்.

3. ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கினை மறைத்து வாதி வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், வாதிக்காக சாட்சியம் அளிக்க என்னை அழைத்து வந்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

ஒம்/- முருகேசன்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.25 12:31:27 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**